# சீக்கிரம் தயாராகுங்கள், இயேசு புறப்பட்டுவிட்டார்!

**லில்லியன் ஸ்டான்லி, வேலூர்.**

‘‘**இயேசு** வருகிறார்’’ என்ற செய்தி ஆதியாக மத்திலேயே அறிவிக்கப்பட்டுவிட்டது. “இதோ, கர்த்தர் வருகிறார்’’ என்று ஏனோக்கு தீர்க்கதரிசனம் உரைத்தார் (யூதா 14,15). ஆகவே ஆதாம், ஏவாளும் இரண்டாம் வருகையை அறிந்திருந்தனர். இந்த இறைவாக்கிற்குப் பிறகு 4000 வருடங்களுக்கும் கூடவே உருண்டோடிவிட்டன. எனவேதான் இது கட்டுக்கதையாக எண்ணப்படுகிறது. இயேசுவின் வருகை பவுலின் தலைக்குள் ஓடிக்கொண்டே இருந்ததனால் தெரிந்தவர்களுக்கெல்லாம் எழுதி ஆயத்தமாகும்படித் துரிதப்படுத்தினார். ஆகவேதான். “பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக, மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்’’ என்றார் (1 தெச 4:17). இன்று உலகில் நடப்பவை யாவும் அவரது வருகையை உரக்கக் கூறுகின்றன. போதுமான அளவு இயேசு எச்சரித்திருந்தும் அதுவும் போதாதென்று சபைகளுக்கும், சபைகளிலுள்ள ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் இறுதி எச்சரிக்கையை தமது கடைசி புத்தகத்தில் அறைகூவியுள்ளார். சபைகளுக்குச் சொல்லப்பட்ட அறிவுரைகளிலிருந்து நாமும் உற்சாகமடைந்து, எச்சரிக்கப்பட்டு அவரை சந்திக்கத் துரிதப்படுவோம்.

### *1. எபேசு - அன்பின்மை (வெளி 2: 1-7)*

இந்தத் திருச்சபை பிரிஸ்கில்லாள் மற்றும் ஆக்கில்லாவால் நிறுவப்பட்டதாக எண்ணப்படுகிறது. அவர்களது கடின உழைப்பையும் பொறுமையையும் தீமையை சகியாமையையும் இயேசு அறிந்திருந்தார். எபேசு சபையில் இயேசு சுட்டிக்காட்டிய முக்கியக் குற்றச்சாட்டு, அவர்களது அன்பின்மையே. அவர்கள் சபையாயிருந்தனர்; ஐக்கியக் கூட்டங்கள் நடத்தினர்; ஆனால் ஆசாபாசமான அன்பு இல்லை. “ஆனாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன் பேரில் எனக்குக் குறை உண்டு” (வெளி 2:4). அப்படியானால் அவர்களது ஆதி அன்பு எப்படி இருந்தது? தங்களது எளிய சகோதர சகோதரிகள் சற்று பணக்காரராகும்படி, பணக்காரர் தங்கள் கூடுதல் சொத்தைக் குறைத்து சற்று வறியவரானதன் மூலம் தேவன்மேல் கொண்டிருந்த தம் அன்பை வெளிப்படுத்தினர். கடவுளையும் அயலாரையும் நேசித்து பிரதான கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தனர். தீர்மானங்கள் எடுப்பதில் அடிதடியின்றி ஒருமனமாயிருந்தனர். வீட்டிற்கு வீடு ஐக்கிய விருந்துண்டு உறவை வலுப்படுத்தினர். செலவையோ நேரத்தையோ வேலையையோ கணக்குப் பார்க்கவில்லை. முகங்கோணாமல் மகிழ்வோடு உண்டனர். உறவைச் சிக்கலாக்காமல் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு, மன்னித்து அரவணைத்து எளிய இதயத்துடன் இருந்தனர். அவர்களது ஒற்றுமை, மலர்களை நாடி வரும் தேனீக்களைப் போல மக்களைக் கவர்ந்தது (அப் 2:45-47). அதாவது, கர்த்தரை மையமாகக் கொண்டே அவர்களது உலகம் சுழன்றது.

இறையன்பு நமது உள்ளங்களில் ஊற்றப்படும்போது ஆவியானவர் செய்வது இதுவே. ஆனால் நாளடைவில் நமது குறி கடவுளை விட்டு பணத்தை நோக்குகிறது. தாந்தின்னிப் பறவைகளாகிறோம். வேலை, வேலை என்று ஓடுவதால் விருந்தினரைக் கண்டு முகம் சுளிக்கிறோம்; அல்லது அயலவரைச் சந்திக்கச் செல்வதை நேரத்தை வீணடிப்பதாக நினைக்கிறோம். அப்படியே சென்றாலும் அது வெட்டிக் கதை பேசத்தான்; கிறிஸ்துவை மையமாகக் கொண்ட ஐக்கியமல்ல. சாதா உணவை சந்தோஷமாக சாப்பிடாமல், ஹோட்டல் உணவை நினைத்து வனாந்தர இஸ்ரவேலரைப்போல முறுமுறுக்கிறோம். பால் மனமின்றி ஒருவரையொருவர் சந்தேக மனதோடு நோக்கி தூரத்திலேயே வைத்துக்கொள்ளுகிறோம். கர்த்தர் மேலுள்ள அன்பு மங்கி அணைவதில் ஆச்சரியமென்ன?

வெளியான பொருள்-உலகையும் அன்பும் மனவுணர்களுமான உள்-உலகையும் இணைத்துக் கொண்டுபோகப் பயிலவேண்டும். சம்பாதித்து

எதிர்காலத்திற்கு சேமிப்பது அவசியம்தான் ஆனால் இறைவனும் அவரது காரியங்களும் அதைவிட முக்கியம். ஆதி தெய்வீக அன்பிற்கு நடத்த ஆவியானவரை அனுமதிப்போமானால் அதுவே நமது உறவுகளுக்குள் ஓடையாய் ஓடி நம்மை உறுதியான ஐக்கியங்களாக உருவாக்கும். வீட்டு ஐக்கியக் குழுக்கள் உலகிற்கு கலங்கரை விளக்குகளாகும். அப்பொழுது வாழ்வு தரும் மரத்தின் பரதீசு கனியை இயேசு நமக்குக் கொடுப்பார்.

## *2. சிமிர்னா - பாடுகள் (வெளி 2:8-11)*

இந்த சபையில் இயேசு குற்றம் காணவில்லை. சபையில் கடிதம் வாசிக்கப்பட்டபோது எத்தனை ஆறுதல் அடைந்திருப்பர்! துன்பம் அனுபவித்துக் கொண்டிருந்த சிமிர்னா சபையினருக்கு இயேசு கூடுதல் பாடுகளை அறிவித்தார். இதன் பின்னணியில் யார்? பிசாசு! எதற்காக? சோதிக்கப்பட! (வெளி 2:10 ). எரிப்பதற்காக பிசாசு அவர்களை நெருப்பில் போட்டான். ஆண்டவரோ அவர்களைப் பொன்னாக வெளிக்கொணர்ந்தார். வயிற்று வலியும் தலைவலியும் அவரவருக்கு வந்தால் தானே தெரியும். பிறர் நம்மை ஆறுதல் படுத்தலாம், ஆனால் பாடுகளைப் பகிர்ந்துகொள்ள முடியாதே. ஒரு பிரச்சனை கூட்ஸ் ரயில் போல நம் மேல் மோதும்போது முதலாவது பாதிக்கப்படுவது நமது மனமே. ஏன் எனக்கு? ஏன் இது? ஏன் இப்போது? ஆண்டவர் அமைதிகாப்பது ஏன்? இயேசு ஜெபத்தில் அலறித் துடித்தார் (எபி 5:7). நெஞ்சைப் பிடித்துக் கொண்டு கதறியிருப்பார் என்று கற்பனை செய்கிறேன். ஆகவே பாடுகளைப் புரிந்துகொள்ளக் கூடியவர்தான். எனவேதான் நமக்காக வேண்டுதல் செய்யும்படி எப்பொழுதும் உயிரோடிருக்கிறார் (எபி 7:25). எனவேதான் “பயப்படாதே” என்கிறார் (வெளி 2:10).

உங்களை முதிர்ச்சிக்குள் வளர்த்துக்கொள்ளாவிட்டால், உங்கள் மனநிலையைக் கையாளக் கற்காவிட்டால், நீங்கள் அரைகுறை மனிதர்தான். கவலைப்படுங்கள், ஆனால் அது உங்களை எங்கும் கொண்டுச் செல்லாதாகையால் சீக்கிரம் மேற்கொள்ளுங்கள். இயேசு கேட்பதெல்லாம், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ, தானியேல் போல சாகும்வரை அவரைப் பற்றிக்கொள்ள வேண்டும் என்பதுதான் (வெளி 2:10). பெரும்பாலான இஸ்ரவேலர் வனாந்தரப் பாடுகளைத் தாக்குப்பிடிக்க முடியாமல் பல்வேறு பாவங்களில் விழுந்தனர். யோசுவா, காலேபிற்கும் அதே பாடுகள்தான். ஆனால் இறுதிவரை உத்தமமாயிருந்து கானானில் களிகூர்ந்தனர். கடின சூழ்நிலைகளில் வெற்றி எடுப்பது சாத்தியமே என நிரூபித்தனர்.

சோதனைகளை வென்று சாதனை படையுங்கள். இறுதிவரை விடாப்பிடியாக நிற்பவர்களே மீட்கப்படுவர் (மத் 24:13). பவுல் “அந்த நாளில்” அவர் பெறப்போகும் கிரீடத்தின் மேல் கண்களைப் பதித்திருந்தார். அவருக்கு மட்டுமல்ல, இயேசுவின் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அருளுவார் (2 தீமோ 4:8). இயேசு உங்கள் தலையில் கிரீடத்தை வைக்கும் நாளிலே எத்தனைப் பரவசம்! (வெளி 2:10).

## *3. பெர்கமு - உறுதி (வெளி 2:12-17)*

“வந்தது வரட்டும்” என்ற மனப்பான்மையே உறுதி. அது மார்டின் லூத்தரின் குணம். அது “உலகத்தின் எல்லாப் பிசாசுகளும் எதிர்த்து வந்தும் பின்வாங்கேன்” என்று சொல்லும். “நான் பெரிய வேலையைச் செய்கிறேன், நான் வரக்கூடாது” என்ற நெகேமியாவின் ஆவி (நெகே 6:3). பெர்கமு விசுவாசிகள் சாத்தானின் ஆட்சிக்கடியில் வாழ்ந்தனர் எனலாம். இருப்பினும், இயேசுவின் பெயரை உறுதியாய்ப் பற்றிக்கொண்டு அவரை மறுதலிக்க மறுத்தனர். தங்கள் கண்களுக்கு எதிராக உண்மையுள்ள சாட்சி அந்திப்பா கொலை செய்யப்பட்டாலும் தளரவில்லை (வெளி 2:3). ஆகவே தங்கள் நிலைமை தெளிவாயிருந்தாலும் தீர்மானத்தில் உறுதியாயிருந்தனர். அது மட்டுமல்ல, சாத்தானின் நிழலிலேயே ஊழியமும் செய்தனர். அவர்களுக்கு இடறலாக அவர்களைச் சூழ நிக்கொலாய் மத “சகோதர சகோதரிகள்” பிலேயாமின் போதகத்தைப் பின்பற்றி விக்கிரகக் கோவில்களில் படைக்கப்படும் பந்திகளில் கலந்துகொண்டு, பாலியல் பாவங்களில் உழன்று கொண்டிருந்தனர். ஆண்டவர் அவர்களை அடிக்குமுன்பாக அக்கினியிலிருந்து அவர்களை மீட்கும் பொறுப்பு “சிறு

மந்தையின்" தலைமேலிருந்தது (வெளி 2:13-16; யூதா 23).

கடைசி நாட்களில் வாழும் நம்முடைய சூழ் நிலையை இது ஒத்திருப்பதாகத் தெரிகிறது. நமது சேவைகளையும் சாத்தானின் தொடர்ந்தேர்ச்சை யான தாக்குதல்களையும் தேவன் அறிவார். நாமும் அவரைப்பற்றிக்கொண்டு, என்று நம் தலையில் இடிவிழுமோவென்று நடுங்கிக் கொண்டிருக்கிறோம். தாக்குதல் செய்திகள் அவ் வப்போது நம் காதுகளுக்கு வருகின்றன. இது சாத்தானின் "நேரமும் அந்தகாரத்தின் அதிகாரமு மாயிருக்கிறது" (லூக் 22:53). திருத்தூதுவரின் நாட்களில் திரும்ப வாழ்கிறோம். அவர்களது தைரி யத்தையும் உறுதியையும் பின்பற்றி வாழ்வோம். அப்பொழுது இயேசு மன்னாவையும் புதிய பெயரை யும் நமக்கு அருளுவார்.

### *4. தியத்தீரா - ஒழுக்கக்கேடு (வெளி 2:18-29)*

பாலுறவுப் பாவங்கள் இச்சபையை கரையா னாய் அரித்துக் கொண்டிருந்தன. கரையானை கவனிக்காமல் விட்டால் அது கட்டிடம் முழுவதை யும் தின்றுவிடும். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் விபசாரம் வெளிக்கொணரப் பட்டு. வேரோடு பிடுங்கப்பட வேண்டும். தியத்தீரா சபையினர் வேலையில் மும்முரமாய், விசுவா சத்தில் உறுதியாய் பொறுமையில் முன்மாதிரியாய் திகழ்ந்தனர். ஆனாலும் கரையான்கள் கள்ளத் தனமாக சபையை ஆக்கிரமித்தன. யூதா சரியாய்ச் சொல்லுகிறபடி, பன்னிருவர் மத்தியில் யூதாஸ் இடம் பிடித்ததுபோல தேவனுடைய கிருபையை காம விகாரத்துக்கேதுவாகப் புரட்டி பக்தியற்றவர்களா கிய சிலர் பக்க வழியாய் நுழைந்திருந்தனர் (யூதா 4). களங்கமற்றவரைத் தம் வலையில் பிடிக்கின்றனர். இந்தச் சிறியவர் இடறலடைவதைக் காட்டிலும் இவர்கள் கழுத்தில் ஏந்திரக்கல்லைக் கட்டி சமுத் திரத்தின் ஆழத்தில் தள்ளுவது நல்லது (லூக் 17:2). ஆனால் நமது கைகள் கட்டப்பட்டிருப்பதால் இந்த ஒழுக்கக்கேடான மார்க்கத்தைப் பார்த்தும், விளக்குப் பூச்சிகள் நெருப்பில் விழுவது போல பலவீனர் விழுவதைக் கண்டும் வாளாவிருக்கிறோம்.

சோதனைகள் தேவதூதராய் வரும். கவனம்! நம்மைக் கறைபடாதபடி பார்த்துக் கொண்டு தீயோரை அம்பலமாக்கி, ஏமாறக்கூடியவர்களை அவர்கள் பொறிக்குத் தப்புவிப்பது நமது பெரும் பொறுப்பாகும் (யூதா 22,23 ) கர்த்தருக்கும் மனச் சான்றுக்கும் கீழ்ப்படியாமல் முரண்டு பிடிப்போரை அவரே பார்த்துக் கொள்வார். கர்த்தர் நமது இருத யத்தையும் மனதையும் பார்க்கக்கூடிய எக்ஸ்ரே கண்களுடையவர் என்பதை அப்பொழுது உலகம் அறியும்.

நவீன மார்க்கத்திற்குத் தப்பி உத்தம புத்திரராய் வாழ்ந்து சாத்தானின் ஆழங்களை எட்டியும் பார்க்காதவர் பாரமின்றி கர்த்தரின் கிருபையில் மிதப்பர். இருப்பினும் தங்களுக்கிருப்பதை இறுக் கமாய்ப் பற்றிக்கொண்டு வருகை வரை தாக்குப் பிடிப்பது கடினம்தான்.

### *5. சர்தை - உயிரின்மை (வெளி 3:1-6)*

ஆடலும் பாடலும் வாத்தியக் கருவிகளும் முழங்குகின்றன! ஆராதிப்பு பிரமாதம்! பிரசங்கம் தீப்பொறிதான்! சபை மற்றும் அதன் மார்க்க வியாபாரத்தைப் பறைசாற்றும் நடவடிக்கை களால் கூட்டம் அலைமோதுகிறது. மக்களை ஏமாற்றலாம், கடவுளையல்ல. அவர் உள்ளும் புறமும் பார்க்கிறார். உயிரோடிருக்கிறேன் என்று பறைசாற்றும் உங்கள் ஆர்ப்பாட்டம் அவரை "ஆஹா" என அசத்தாது. உங்கள் உள்ளான அழுகின மாமிசத்தை அவர் காண்கிறார். இந்த சபைக்கு இயேசுவிடமிருந்து ஒரு நல்வார்த் தையும் இல்லை. எஞ்சியிருப்போருக்கு அவர் தரும் சூடான ஆலோசனைகள் சில:

- கடைசி மூச்சு இழுத்துக்கொண்டிருப்போருக்கு உயிரூட்டுவீர்.
- பெற்றுக்கொண்டவைகளையும் கேட்டவைக ளையும் மறந்து விடாதீர்.
- சோம்பலிலிருந்து எழும்புவீர் (வெளி 3:1-3).

என் பொறுப்பு என்ன? ஆண்டவர் பாதம் வீழ்ந்து என்னை நான் உயிரூட்டிக்கொள்ள வேண்டும். அவருடைய வார்த்தையிலிருந்து

சக்தியை உறிஞ்சிக்கொள்ளவேண்டும். ஆவியானவர் என்னை சுத்திகரிக்க இடமளிக்க வேண்டும். என் பொறுப்பு அதோடு முடியவில்லை. பலவீனருக்கு இறைவார்த்தையைப் போதித்து நெரிந்த நாணல் முறியாமலும் மங்கி எரியும் திரி அணையாமலும் காப்பதில் நான் சுறுசுறுப்பாயிருக்க வேண்டும் (ஏசா 42:3). பலவீனரை பலப்படுத்தி, நோயுற்றோரை குணமாக்கி உடைந்து போனவர்களைக் காயங்கட்டி, துரத்தியடிக்கப்பட்டவர்களைக் கொண்டுவந்து, காணாமற்போனவர்களைத் தேடவேண்டும் (எசே 34:4; வெளி 3:2,3) அப்போது அவர் திடீரென்று வந்தாலும் கரங்களைத் தட்டி முகமலர்ந்து வரவேற்பேன். இயேசுவோடு வாக்கிங் போகவேண்டுமா? அழுக்கு ஆடையோடே போக முடியாதே. உடை கறைபடாதபடி பார்த்துக்கொள்ளுங்கள் (வெளி 3:4). மேற்கொள்வோருடையப் பெயர்கள் ஜீவ புத்தகத்தில் பொறிக்கப்படும் (வச 5).

### *6. பிலதெல்பியா - திறந்த கதவு (வெளி 3:7-13)*

பிலதெல்பியரின் உழைப்பை ஆண்டவர் அறிந்திருந்தபடியால் அவர்களுடைய நற்செய்திப் பணி தடையின்றி முன்னேற அவர்கள் முன் திறந்த வாசலை வைத்தார். தைரியமாய் முன் செல்வோருக்குத்தான் திறந்த வழி (வெளி 3:8). உடலில் குத்திக்கொண்டேயிருக்கும் ஒரு முள்ளோடு பவுல் சளைப்பின்றி எதிரிகளையும் பொருட்படுத்தாது முன் செல்வார் என்று அறிந்துதான் கர்த்தர் அவருக்கு முன்பாகப் பெரிதும் அனுகூலமுமான கதவைத் திறந்து வைத்தார் (1 கொரி 16:9), யாரும் பூட்டக்கூடாதபடி திறக்கிறவர் அவர் (வெளி 3:7). பிலதெல்பியா சபையை ஆண்டவர் குறை கூறவில்லை. அவர்கள் வசன வெளிச்சத்தில் நடந்தபடியால், அந்த பலவீனமான சபையை தாங்கிப் பிடித்தார் (வச 8). விடாப்பிடியாய் இருக்கும்படி கர்த்தர் சொன்னதை கஷ்ட காலத்திலும் கடைபிடித்தபடியால் இறைமகன் அவர்களை நேசித்து உலகின்மேல் வரவிருக்கும் சோதனை காலத்தில் அவர்களைக் காத்துக்கொள்வதாக வாக்களித்தார் (வச 10).

இங்கு நமக்குப் பாடமென்ன? இறையரசின் நற்செய்தியை அறிவிக்கக் கருத்தாயிருப்போரை இறைவன் நேசிக்கிறார். மரணமே வந்தாலும் மார் தட்டிச் செல்வோருக்கு முன்பாக மூடக்கூடாதபடி அவர் வாசலைத் திறக்கிறார். அறுவடை அருகிலிருப்பதால், நோஞ்சானும் நான் பயில்வான் என்று சொல்லிக் களமிறங்கவேண்டுமாம் (யோவேல் 3:10,13). சாக்குப்போக்குச் சொல்லாமல் திறந்த வாசலுக்குள் நுழைவோம். வீட்டிலிருந்தால் திறந்த வாசல் தென்படாது. வெளியேறி, பூட்டியிருப்பதாகத் தெரியும் கதவுகளைத் தட்ட வேண்டும். தைரியமாய் அதைச் செய்தால், நாம் உள்ளே போய் ஆக்கிரமிக்கும்படி கர்த்தரே கதவை விரிவாய்த் திறப்பார். இஸ்ரவேலருக்குக் கடவுள் கானானை வாக்களித்திருந்தாலும் அவர்கள் முன்சென்று அரக்கர்களோடு யுத்தம் செய்து தேசத்தைக் கைப்பற்ற வேண்டியிருந்தது. அவர் தம் சபையைக் கட்டுவார்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை. ஆனால் அவர் கட்டுவதற்கு உறுதியான கற்கள் தேவை (மத் 16:18). ஆகவே உறுதியாவோம். இதோ கிரீடம்!

### *7. லவோதிக்கேயா - வெதுவெதுப்பு (வெளி 3:14-22)*

லவோதிக்கேயா சபையின் வெதுவெதுப்பு ஆண்டவரின் வயிற்றைப் பிரட்டியது. அவர்களைக் குறித்துப் பெருமையாய்ப் பேச அவருக்கு ஒன்றுமில்லை. ஆடையின்றி பிச்சைக்காரனைப் போலிருந்தும் தங்களைப் பிரமுகர்களாக எண்ணினர் (வெளி 3:17), கண்கள் திறக்கப்பட்ட பிறவிக் குருடனையும் அவனைச் சூழ நின்றவர்களையும் பார்த்து இயேசு, “காணாதவர்கள் காணும்படியாகவும், காண்கிறவர்கள் குருடராகும்படியாகவும் நான் இந்த உலகத்தில் வந்தேன்” என்றார். அவருடனே இருந்த பரிசேயரில் சிலர் இவைகளைக் கேட்டபொழுது: நாங்களும் குருடரோ என்றார்கள். இயேசு: நீங்கள் குருடராயிருந்தால் உங்களுக்குப் பாவமிராது; நீங்கள் காண்கிறோம் என்று சொல்லுகிறபடியினால் உங்கள் பாவம் நிலைநிற்கிறது என்றார் (யோவா 9:39-41). லவோதிக்கேயர் குருடராயிருந்தும் பார்ப்பதுபோல் பாசாங்கு செய்தனர். தாங்கள் குருடர்தான் என்று ஒத்துக்கொண்டு அவரிடமிருந்து தங்கம், ஆடைகள், கண்ணுக்குக்

கலிக்கமும் வாங்கிக் கொண்டால் அவர்களை அரவணைத்துக்கொள்ள ஆண்டவர் ஆயத்தமாயிருந்தார் (வெளி 3:17, 18).

அரைகுறை விசுவாசிகளை வாந்திபண்ணிப் போடுகிறவரல்ல இயேசு. அவர்கள் மேல் வைத்திருந்த அன்பினால் கண்டித்து தண்டிப்பேன் என்றார். மனந்திரும்புதலில் அவர்கள் தீவிரம் காட்ட எதிர்பார்த்தார் (வெளி 3:19). நம்மில் பெரும்பான்மையினர், நான் நன்றாகத்தானே இருக்கிறேன், என்றெண்ணுபவர். சாலொமோனைக் குறித்து கர்த்தர் தாவீதிடம்: நான் அவனுக்கு அப்பாவாயிருப்பேன், அவன் எனக்கு மகனாயிருப்பான்; என் கிருபையை அவனை விட்டு எடுக்கமாட்டேன், என்று வாக்குரைத்தார் (1 நாளா 17:13). இருந்தாலும் சாலொமோன் கருத்தாய் மனந்திரும்பாததால் கிருபையை எடுத்துவிட்டார். கடவுள் விரும்பினாலும் நாம் மனந்திரும்பாவிட்டால் அவர் உதவி செய்ய முடியாது.

எல்லா இடர்களையும் தாண்டி தகப்பனுடைய சிங்காசனத்தில் இயேசு அவரோடே அமர்ந்தார். இயேசுவோடு அவரது சிங்காசனத்தில் உட்கார விருப்பமா? அப்படியானால் அவரது சத்தத்தைக் கேட்டு கதவைத் திறந்து அவர் உங்கள் இரகசியங்களை அறியும்படி, வரவேற்பு அறையையும் தாண்டி சாப்பாட்டு மேசைக்கு அழைத்துச் செல்லுங்கள். அப்போது எம்மாவூர் சீடரைப் போல ஐக்கியம் கொள்ளலாம் (வெளி 3:20,21).

ஏழு சபையின் கடிதங்களும் ‘‘ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ’’ என்ற அறைகூவலோடு முடிகின்றன. ஜெயங்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுகளும் தோற்பவர்க்கு தண்டனைகளும் அறிவிக்கப்படுகின்றன. எனவே கிரீடத்தைப் பெறும்படியாக முழு பலத்தோடு சோதனைகளையும் அழுத்தங்களையும் கஷ்டங்களையும் பரீட்சைகளையும் வெற்றிகரமாய்த் தாண்டி வான் வீடு எய்துவோம்!

அதிக நேரமில்லை, அவசரப்படுவோம் !

(www.lilianstanley.com)